



ஓலை 154| ஓசை 277| டிசம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## பண்டிதமணி மு கதிரேசன் செட்டியார்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்

## பொருள்

தாம் பிறந்த குடியை மேன்மேலும் உயர்ந்த குடியாக உயர்த்த விரும்புகிறவர்கள், சோம்பலை அறவே விலக்கி, முயற்சியாளராக விளங்க வேண்டும்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## மேழிச் செல்வங் கோழை படாது!

பா வகை: நேரிசை அளவடி வெண்பா




ஓடியோடி நாளும் உழைத்திட்டச் செல்வத்தை
ஆடி அறத்தால் அழித்தபோதும் ஓடிடாதே!
மேழிப் பிடித்தே மெலிந்துழைத்தச் செல்வமெல்லாம்
ஆழியில் போட்டதா காது.

கார்மேகம் பாடுபட்டுக் காத்த மழைச்செல்வம்
நீரும் நிறைந்த நிலத்திலே - ஏர்பிடித்(து)
ஓட்டியே பாடுபட்டு ழைத்தேதான் சேர்த்திட்ட
ஈட்டியச் செல்வ மினிது.

கல்விபோல் யாரும் களவாகாச் செல்வந்தான்
நல்(ன்) நிலத்தில் பாடுபட்டு நாளுமே - நல்லுழைப்பால்
ஈட்டியது யாவும் இழக்கலாகா செல்வமாகும்;
நாட்டின் பெருஞ்செல்வம் நாடு.





### இலக்கணக் குறிப்பு:

நான்கடிகள் பெற்று வரும். நான்கடிகளில் மூன்றடிகள் நான்கு நான்கு சீர்களைக் கொண்டு, நான்காமடி மூன்று சீர்கள் வந்து, ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் கு,சு,டு, து, பு, று என்ற எழுத்துக்களில் ஒன்று உகர ஓசையுடன் முடியும். தனிச்சீர் பெற்று வரும். நான்கடியும் ஓரெதுகைப் பெற்றோ அல்லது இரண்டடியுடன் தனிச்சீரும் ஓரெதுகையும், மற்ற இரண்டடி ஓரெதுகையும் பெற்றோ வரும். ஒவ்வோரடியும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று வரும்.வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் வந்து, செப்பலோசைப் பெற்று வரும். சீருக்குச் சீர் காய் முன் நேர், நேர் முன் நிரை நிரை முன் நேர் என்ற வெண்டளைப் பெற்று, குற்றியலுகரம் தவிர்த்து வரும்.

பா வகை: நேரிசை வெண்பா

**கண்காணும் காட்சி மனதை எழுப்பிட**
**மண்தனில் வாழ்வோர்**
**மயங்கிடத்-தண்மையின்றி**
**காசைப் புதையலாய்க் காப்பவர் ஈயவே**
**ஆசையற்றே ஐம்புலனை ஆள்.**



கவிஞர் செ. கலைவாணி

ஒருகட்டத்தில்
நானில்லாமல் போவேன்.
ஒருகட்டத்தில்
நீங்களுமில்லாமல் போவீர்கள்.
ஒருகட்டத்தில்
இவ்வுலகில்
எதுவுமில்லாமல் போகும்.
பின்னர் வரும் யுகத்திற்கு
அதுதான் "ஆதி"

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

கோட்டை கட்டும் மனம்
ஆகாயக் கோட்டை
அது
இரும்புக் கோட்டையாய்
இருப்பினும்,
கலையும் அது;
ஐயமில்லை; அதில்.
கருத்தினால் கட்டு
உன் மனையை!
முயற்சியுடன் கட்டு
கனவிலும், நினைவிலும்;
ஆர்வமுடன் கட்டு.
அது என்றும் நிற்கும்;
மணல் மனையாய் இருப்பினும்;
விழைவெனும்
சாந்து கொண்டு பிணைக்க;
ஒரு நாள்.
அது கல் மனையாகும்
அற்புதம் காண்பாய்



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# என் அன்னை

அன்பின் உறைவிடமான அன்னையே.
ஈரைந்து மாதங்கள் என்னை கருவில்,
தாங்கிய உன்னத பூஞ்சோலையை,
அழகிய உலகை அன்பாய் பரிசளித்தாய்.

பூவாய் கண் மலர்ந்து உலகை பார்க்கிறேன்.
தாலாட்டில் பாசம் எனும் கீதம்,
இசைத்து பாடியவள் நீயே.

அன்பெனும் ஆழ் கடலில்
விளைந்த வலம்புரி முத்தே.
என் வாழ்வில் ஒளி விளக்கே,
தியாகதாதின் உவமை நீயே.

என் பசி தீர்க்க விரதம் காத்தவளே
உன்னை நான்
ஒரு நொடியேனும் உச்சரிக்காவிடில்
உயிர் துறந்து விடுவேனே.



கவிஞர் ரிஸ்னா அஜூஸ், அக்குறணை (இலங்கை)

# அன்புள்ள

அன்புள்ள என்று காகிதத்தில்
எழுதிய வரிகள் இன்று
கிழிசல்களாய்


வெள்ளை காகிதத்தில்
எழுதுகோலின் முத்தங்கள்
இன்று ஊமையாய்

நலமா என்று கேட்கப்பட்ட
கேள்விகள் தொலைந்து
போன சோகங்களாய்

கடிதங்கள் களவாடப்பட்டு
அலைபேசிகள் இன்று
அரசாட்சியில்

எப்படி இருக்கிறாய் என்ற
எழுத்துக்கள் இன்று
அச்சுப்பிழைகளின் அழைப்பிதழாய்

அன்புள்ள என்ற சொற்கள்
நாகரீக உலகில்
அவசர சிகிச்சை பிரிவில்
மூச்சுத்திணறலாய்




கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# உன் வார்த்தைத் தேன் வார்க்குமாதே?

நித்தமும் நினைவுகளில்
நினது நினைவலைகளே
நெஞ்சில் நீங்கிடாத
ஞாபகங்கள் உன்னாலே

பேசிய வார்த்தைகள் யாவும்
உள்ளத்தில் மொட்டானதே
இதழ் விரித்து மலராய் மலர்ந்தாயே

தேனருந்தும் பட்டாம்பூச்சியாய்
தேடியே வந்தேனே
செவ்விதழ் அதரங்களில்
முத்திரை பதித்தேனே

உயிர்வரை இனித்திட
உற்சாகம் பிறந்ததே
உணர்வில் கலந்திடவே
உறவாகி வந்தவளே

உன் வார்த்தைத்
தேன் வார்க்கிறதே
சொல்லிட இனிமை தவழும்
இளமை இனிதாகும்

சிற்றிடைப் பாவையே
சிதறுகிறது மனமுமே
விம்மிய அழகில்
மயங்கிடும் நெஞ்சமே

வஞ்சமில்லா எழிலரசியே
என்னுள் மின்சாரம் பாய்ச்சியவளே
காதல் பாடத்தின் காரிகையே
காந்தமாய் ஈர்த்திட்டாயே



மீளவழியின்றி உன்னிடம்
சரணடைந்தேன் கண்ணே
பருவராகம் இசைத்திடு என்னைத்தான்
அள்ளியே அணைத்திடு

அழகான அன்னமே
தேன்சுவைக் கன்னமே
சஞ்சலமில்லை எனக்கு
வஞ்சமில்லா உனதன்பிலே

மஞ்சமானது மடியும்
தஞ்சமானேன் அன்பே
தனிமையது விலகிடவே
குதூகலம் எந்நாளும்

மையலானேன் கண்ணே
உன் வார்த்தைத் தேன் வார்த்திடுதே பெண்ணே

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்



விழிகள் பேச
மொழி மறந்த இதழ்.
தேவதை நிழல் பட
துளிர்ந்த மனம்.
***
வெய்யில் பார்க்க
மலரும் பூவிதழ்
புன்னகை பூஞ்சோலை.
****
கூதிர் மெல்ல விலகி
முன்பனி முத்தமிட
நனைந்த நிலம்.

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

இடைவிடாது இணைந்து
இக்கட்டான நிலையிலும் பார்க்க
தூண்டும் இணையதளமே




கவிஞர் மோனிஷா

# இதயம்

இனிய இதயமாய் இகத்தில் நிறைந்து
கனியாய் சுவைக்கும் கரைந்த மனமே
திறமைகள் பெருக்கி திறன்கள் வளர்க்கும்
மறதியைக் குறைக்கும் மனித மாண்பிலே

இனிமை பேச்சிலே இயற்கையும் மகிழ்ந்தே
கனிவாய் கொஞ்சும் கருத்தின் வளமே
மனதும் மகிழ்ந்தால் மயக்கும் விதமாய்
இனமாய் சிறக்கும் இனித்த நட்பே


உடலையே சீராக்கும் உன்னத இடமே
கடலான பணியை கவர்ந்தே செய்யுமே
இணைந்த கலனாய் இறுதிவரை பயணித்து
துணையாய் நிற்கும் துயரங்கள் போக்கியே

காலங்கள்  கூறும் காட்சியின் பயனாய்
கோலமும் ஆக்குமே கோடியின் செல்வமாய்
உடலின் பாகத்தை உண்மையாய் சீராக்கி
மடலின் பணியாய் மகத்துவம் பெற்றதே

துணையாய் நிற்கும் துயரங்கள் போக்கியே
இணையாய் வந்திடும் இணையற்ற தன்மையே
நல்லவை தீயவை நலமுடன் அறிந்து
நன்மை புரிந்திடும் நட்பான சிறப்பே

கண்ணுக்குத் தெரியாத கற்பனை வளமாய்
கணநேரம் துாங்காத கருத்தான உயிரே
உள்ளம் சீராக்க உன்னத உயிராய்
துள்ளும் இளமையை துடிப்பாய் காட்டுமே

கொடையின் வளமாய் கொடுக்கும் சுத்தம்
மடையைத் திறந்த மாண்பின் சிறப்பே
நான்கு அறையின் நன்மைகள் பலவும்
தென்றல் வகையாய் தேற்றுமே தினமும்



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# நெஞ்சிலே மலர்ந்த நினைவு

என் பால்யங்களை
கவலையெனும் பெரும்நோய்
தின்றபடியே அனேக நாட்கள்
கடந்து விட்டன!

புதிதாய் எதுவும்
இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை.
இருப்பதைக்கொண்டு
எதிர்நீச்சலடிக்கும் பக்குவமும்
பெரிதாய் இல்லாததால்
ஏதோ ஒன்றை பற்றிக்கொள்ளும்
இரண்டுகெட்டான் மனநிலையில் உழன்றபோது
எதிர்பாரமல் கிடைத்த மாணிக்கமாய்
வாழ்க்கைத் துணை அடைவதெல்லாம்
இறைவனின் கொடுப்பினையென
எங்கோ அசிரீரியாய் ஒலித்த
நகைப்புச் சத்தத்தைக் கடக்கமுயன்ற நாளில்தான்
நெஞ்சிலே மலர்ந்த நிலவாக
நீ என்னுள் நுழைந்தாய்.



நீண்ட இரவு
தவனை முறையில் தந்தியாப் பரவும் காற்று
தடுமாறும் இருளில்
சலம்பிக்கொண்டே கடக்கும் சிற்றோடை
இருப்பதே தெரியாத
நட்சத்திரம் அனுப்பும் மின்னஞ்சல் ஒளிச்சூடு
இடைவெளிவிட்டு
அவ்வவ்போது கச்சேரி இசைக்கும்
கானக்குயிலின் சத்தம்
தாளலயத்தோடு
அலுங்காமல் குலுங்காமல்
சோழியை உருட்டியதுபோல்
சிக்கனமாய் நீ அவிழ்த்து விடும்
சிருங்காரச் சிரிப்பில்
பால்யத்தின் வடுக்கள் நிரம்பிய
காணல்வரிக் கவிதை அத்தனையும்
சுவடியின்றி கரைந்தன.

தேனூறும் உன் இதழில் குதித்து
வழிந்தோட நீ காதலைச் சொல்லும்போது
கலித்தொகைப்பாடல் கற்ற இன்பம்
என் நெஞ்சில் படமாய் எழுகிறது.


கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

குழந்தை குப்பிக்குள்
கடல் நீரை நிரப்பியதும்
குப்பிக்குள் இருந்த நீர்
கடலாகிப் போனதாகக் குதித்தாள்
அதனுள்ளே நீந்திய மீன்
தானும் கடலாக நினைத்து
நீந்திக் கொண்டே
குஞ்சுகளைத் தேடியது.



கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# கடந்த கால கவிதை



பலவித கனவுகளை
நெஞ்சில் சுமந்து,
வெளிச்சொல்ல அறியாது
ஏங்கிய ஆசைகளை

பிறரிடம் சொல்லியும்
பயனில்லா தன் ஏக்கங்களை

பிறர் ஆதரவை எதிர்பார்த்த
தருணங்களை

தாய் அன்பிற்காய்
ஏங்கித் தவித்து
காத்திருந்தும் பயனின்றிக்
கழித்த நாட்களை

தந்தையன்பில் ஒவ்வொரு நாளும்
தாயைக் கண்டறியத்
தேடிய பொழுதுகளை

பலரின் விமர்சனங்களை
எண்ணி எண்ணியே
கடந்த நொடிகளை

அவள் விழிகள் பொழிந்த
மௌன கண்ணீர் மழையில்
நனைந்து விட்டது அந்தக் காகிதம்

தனியாய்ப் போராடியவளுக்கு
முதலாதரவாய் அவள் தந்தை
கரம் பிடித்து தைரியம் சொல்ல
அவள் விழிகள் நனைந்தன
ஆனந்தத்தில்

அவள் காகிதத்தில் எழுத
முயன்ற கடிதம்
முழுமை பெற்று,
அவள் மனதாழத்தில்
மறைந்திருக்கிறது

அவள் கரம் பற்றும்
அவள் வாழ்க்கை துணைக்கே
அக்கடிதம் சொந்தமாகும்.

கவிஞர் ரஸ்னீரா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)

துளசி தோட்டத்தில்
ஆண்டாள் வீற்றிருக்கிறாள்.
பெரியாழ்வார் ஆண்டாளின் மகளாக
தத்தெடுத்து வளர்த்து வருகிறார்.
சூடிக்கொடுத்த சுடர்கொடி ஆண்டாள்
தொடுத்த மாலையால்
அரங்கநாதன் மனம் மகிழ்ந்தார்.
முப்பது நாளும் மார்கழி மாதம்
திருப்பாவை முப்பது திருப்பாடலை
பக்தியுடன் பாடும் போது
கன்னி பெண்களுக்கு
திருமணம் நிச்சயம் கைகூடும்.
நினைத்த காரியம் கைகூடும்
கல்வி,புகழ் செல்வம் சேரும்.
பக்தியுடன் திருப்பாவை
நோன்பு கடைபிடித்து
அரங்க நாதனை கை பற்றினார்.
ஸ்ரீரங்கத்தில் குடிக் கொண்டிருக்கும்
மகாலட்சுமி மார்பில் சுமந்தவன்
ஆண்டாளை மணம் முடிக்க
ஸ்ரீரங்கத்திற்கு பெரிய ஆழ்வார்
ஆண்டாளை அழைத்து வருகிறார்.
ஆண்டாள் அரங்கநாதருடன்
ஜோதியாக கலந்துவிட்டாள்!



கவிஞர் மா. நந்தினி, சேலம்

# காத்திருப்பேன் காத்திருப்பிற்காக

காத்திருப்பு பல
கடிகாரத்தில் மேயும்
காதலுடன் விழி
கடிகாரம் தனக்குள் சிரிக்கும்
காதல் கொண்ட உள்ளம் நினைத்து!

நிமிடங்கள் செல்லவில்லை
நிமிர்ந்து பார்க்கும்
ஏக்கப் பார்வை!
நிமிடங்கள் செல்கின்றன
நிம்மதியில்லாது
துடிக்கும் பார்வை!

ஒவ்வொரு பார்வையும்
ஒரே வித குற்றச்சாட்டு
நேரம் பற்றியே!
ஒவ்வொரு மணித்துளியும்
வாங்கி நிற்கிறதே
உங்கள் வசைப் பாட்டு!

நேரத்தின் அனுபவம்
நேரில் கூறுவர்
மகிழ்ச்சியா ? வேதனையா?

அருகில் இருக்கும் போது
அதிகம் தேவைப்படும் நிமிடங்கள்!
தூரத்தில் இருக்கும்போது
நிமிடம் விரைகிறதே இல்லையே
நேரம்
நான் என் செய்வேன்
மனதில் தனக்குத்தானே
கேட்டுக் கொள்ளும்.



காத்திருப்பிலும் ஒரு சுகம்
பசி - விருந்து படைக்க முன்
காத்திருப்பது போல்.
இருள் - ஒளிக்கு காத்திருப்பது போல்
எல்லாமே காத்திருப்பிற்குள்
நதி சங்கமிக்கும் கடலாக
காத்திருப்பேன் காத்திருப்பிற்காக!

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

செங்கோலேந்தும் மன்னர்; நிகராய் ஒருவன் ;
சீர்மையுடன் எழுதுகோலைப் பிடித்தான் அந்நாள் !

எங்கெல்லாம் தீதுநடக்கின் துணிவாய் எழுவான் ;
ஏற்றமிகு அறிஞர்சொல் அவையில் ஏறும் !

மங்கிட்ட அரசனையும் புலவர் பாடார் ;
மடமையிலே திளைத்திட்டால் அறம் பாடிடுவார் !

தங்குதடை கடந்திட்டே சான்றோர் கூட்டம்
தாழ்வில்லா சொள்கையினை உயிராய்க் கொண்டார் !


இங்கின்று எழுதுகோலர் அச்சம் கொள்வார் ;
எதிர்நின்றே சட்டங்கள் சிறையில் அடைக்கும் !

தங்கள் நலம்பார்த்தே ஊட கத்தார்
தகைமையிலே தடுமாறி பொய்மை சொல்வார் !

பொங்கிட்டே அறம்காக்கும் காவல் துறையும்
பூட்டிட்ட கைகளுடன் மௌனம் காப்பார் !

ஏங்கிட்ட மாந்தர்க்கு தேர்தல் தீர்வாம் ;
இழிவில்லா தேர்தல்கள் நீதி சொல்லும் !

உங்களாட்சி மலர்ந்திடவே எழுது கோலும்
உழைப்பாளர் துயர்நீங்க நிமிர்ந்து நிற்கும் !



கவிஞர் ஆ. ச. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

கரைந்து கூடி உண்ணும் காகையும்
குரைத்து தனித்து உண்ணும் நாயும்
மேய்ந்து கூட்டமாய் உண்ணும் மாடுகளும்
மேதினியில் என்றும் நன்கு வாழ்ந்திட
அன்றாடமனைத் திற்கும்தேவை உயிர்வளர்க்கும் உணவே!

ஆறறிவு கொண்ட உயிரனாமான மனிதன்
அறமெவை யெவையென்பதை நன்கு அறிந்தவன்;
அரும்பாடுபட்டு பொருளீட்ட இரவுபகல் பாராவுழைப்பவன்;
அந்நியரிடம்கை யேந்தாதுதன் பெருமைகாட்டி மகிழ்வனாயினும்
அற்பபசிவந்தால் அறிவிழந்து நல்லவைபத்தும் துறப்பானே!

வேளாளனே காராளன் என்றுரைத்தான் கம்பன்;
வேதமாம் திருக்குறளும் உழவேயுலகின் தலைமையென்றதே!
மண்ணில் பசியையே மணிமேகலை பிணியென்றிட
மண்ணுக்கு அவதாரமாய் வந்தராமனுக்கு உண்டுப்பார்த்து
இனித்த கனிகளைத்தந்து பசியாற்றிய சபரிக்கு
இராகவன் உடனடியாக முத்தியை அளித்தனனே!

உணவு உயிர்களின் அடிப்படைத் தேவையானதால்
உணவுதந்தோர் உயிர்தந்தவரென புறநானூறும் போற்றுமே!
உணவு தனியொருவனுக்கு இல்லையெனில் உலகழிய
உணர்ச்சிக் கவிதையும் பாரதி தந்தாரே!

உடல்வளர்த்தேன் உயிர்வளர்க்க என்றுரைக்கும் உன்னதக்கவியை
உயர்தமிழில் தந்தனரே திருமந்திரத்தில் திருமூலருமே!
மனிதனுக்கின்று வேண்டிய உணவை மானுடம்
மந்திரத்தாலோ தந்திரத்தாலோ பெற்றிட வியலாதே;

மண்ணில் கைபதித்து இரவுபகல்பாரா உழைக்கும்
மாண்புள்ள உழவனுழைப்பதா லன்றோவுண்கிறோம் நாமெல்லாம்!
மக்கள் பசியாற மாக்களுடன் உழைத்தவன்
சிக்கலில் தவிக்கிறானவன் விளைவித்த பொருள்களுக்கு
சிறந்த விலையில்லை என்பதாலதுவே பெருங்கொடுமை!
சீராட்டிப் பாராட்டுவோமென் றுமிந்தப்பசியாற் றும்பகலவனை!



கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

வரலாறுக் காணாத
விலை ஏற்றம்

வாழ்க்கை நமக்கு
தந்த ஏமாற்றம்

செல்வந்தன் மகிழ்வில்
கிடைத்த கொண்டாட்டம்

ஏழைக்கே அன்றாடம்
கண்ட திண்டாட்டம்

தங்கநகை சீட்டில்
குடும்பம் கொண்டாட்டம்

வியாபார நிறுவனத்திற்கு
வந்த அதிர்ஷ்டம்

முதலீடு செய்யுங்கள்
வாழ்வு வளமாகும்

இல்லையெனில் எதிர்காலம்
கேள்வி கேட்கும்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# எழுதுகோல்



அரசனின் கையில் செங்கோலாய்
அறிவரின் கையில் எழுதுகோல்
மையுடன் மெய்யையும் நிரப்பி விட
உரக்க உரைத்திடும் ஏவலனாய்

உலகில் சரித்திரங்கள் பல
புதிதாய் தோன்றிட
புரட்சி செய்யும் எழுதுகோல்

முகவாயில் தொட்டு
மும்முரமாய் சிந்திக்கும்
அத்தனை பேரையும் இல்லை
ஆயிரத்தில் சிலரையே
ஆக்கியதுண்டு அறிஞராய்

சிவப்பு மையாய் பிழை திருத்தும்
பச்சை மையாய் ஆட்சி செலுத்தும்
கருப்பு மையாய் கோடிட்டுப் போகும்
எழுதுகோலுக்கும் உண்டு பல முகங்கள்

எழுதிப் பழகாத பிஞ்சு விரல்களுக்கும்
சிறிது நேரம் அதிகாரம் கொடுக்கிறது
ஆசிரியராய்
விளையாட்டுப் பொழுதில்
அப்பாவின் சட்டைப்பையில்
நீங்காதிருக்கிறது
அதிகாரத் தோரணையில்
அம்மாவின் அலமாரியில்
பள்ளிக்கால பரிசளிப்பாய்
என்ன என்னவோ வடிவங்கள் இருந்தாலும்
எண்ணத்தில் நேர்மையிருக்க
ஏற்றி வைக்கும் ஏணிப்படியாய் எழுதுகோல்

கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# லஞ்சம்

பணம் பணம் தேடுவதாலே
மனித இனம் அல்லல் படுதே
லஞ்சத்தாலே
பிடுங்கி தின்றே பழகியவர்களுக்கு
உழைத்து உண்ண உயர்ந்த எண்ணம்
வருவதில்லையே

லஞ்சம் தொடங்குகின்றது அரசியலிலே
கொடுக்க முடியாமல் தவிக்கிறது
மனித சமூகமே
செய்து முடிக்க காரியத்தை
தேவையானதே இன்று லஞ்சமே



படித்து முடித்தாலும் வேலை தேட
வைக்கிறது இந்த லஞ்சமே
லஞ்சம் லஞ்சம் கொடுத்தால்தான் வாழ்க்கை
வாழனும் என்ற நாட்டின் சாபமே
நேர்மையானவன் வாழ அஞ்சுகின்றான்
நேர்மையற்றவன் உயர்ந்து செல்கிறான்

அதிகாரி கையில் லஞ்சம்
வாழ நினைப்பவன் கையில் பஞ்சம்
நீதியான உலகில் லஞ்சம் தலை தூக்குகின்றது
நேற்று போல் இன்று இல்லை
இன்று போல் நாளை இல்லை

வாழ்வை எதிர்பார்த்து வாழ முடிவதில்லை
லஞ்சம் பெருக்கெடுத்து ஓடுகிறது
அதிகார வர்க்கம் அதில் நீந்துகின்றது
லஞ்சம் நாட்டின் சாபம்
லஞ்சம் வாழ்வின் துன்பம்

கவிஞர் ஏ எம் முர்ஷிதா பேகம், கண்டி (இலங்கை)

கிருபையின் உருவம் கிறிஸ்துவின் பிறப்பே!
அறிவை போதிக்கும் ஆண்டவரே!
ஸ்பெயின் நாட்டின் பிரசித்திபெற்ற பண்டிகையே
துதிப்போரை துன்பங்கள் நீங்குமே!
மகிழ்ச்சி எங்கும் நிறைந்திருக்கட்டும் ஆண்டவரே!
கிறிஸ்மதுமஸ் இந்நாளில்
நல்லுள்ளம் கொண்ட தங்கள் அனைவருக்கும்!
வாழ்கின்ற நமது பெரியவர்களை கண்டு
வாழ்த்துக்கள் பல பெற்றிடவே வாழ்த்தும் உள்ளம்.



கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம்

# அழகு

மழையழகு
வெயிலழகு

மலையழகு
முகிலழகு

நீரழகு
நதியழகு

நிலவழகு
இரவழகு

மரமழகு
மணலழகு

மலரழகு
மணமழகு

நீயருகில் இருந்தாலே
எல்லாமே அழகு!



கவிஞர் மரூ ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

தீட்டிய சொற்களின்
கூர்த்தன்மை கூடக்கூட
சொற்கிடங்கின் இருப்பில்
சலசலப்புகள் குறைகின்றன.
சாலையோரச் சித்திரத்தில் விழுந்து கிடக்கும்
காசுகளைப் பொறுக்கியெடுத்து
கண்களில் ஒத்திக்கொள்ளும்
வரைபவனின் விரல்களைப் போல
வார்த்தைகளைப் பொறுக்கியெடுக்கும்
கலைக்குள் நுழைந்து நுழைந்து
இன்னும் தவழும் பிள்ளையின்
ஆசையைப்போல
ஏங்கிக் கிடக்கின்றன
புறம் தள்ளிய சொற்குவியல்.
வெட்டியும் ஒட்டியும் ரசித்தும்
வெறுத்தும் வெளிவரும் சொற்களில்
ஈரத்தன்மை பெருகிவர
அமைதியின் கூட்டுக்குள்
ஆயுமெனப் பதுங்குகின்றன
பயன்பாட்டின் வடிவங்கள்.
மனவயலில் சிந்தனைகளை
விதைத்துச் செல்ல
எண்ணக் குவியலிலிருந்து
என்னையே இழுத்து வரும்
சொற்களின் பவனியில்
அழுக்காறும் வன்முறையும்
அமுங்கிப் போக
மௌனத்தின் அடர்த்திக்குள்
அமைதியாகிறது
அர்த்தத்தைத் தேடும் மனம்



கவிஞர் இளையவன் சிவா

பூமி பார்ப்பதற்காய்
வானம் பார்க்கின்றன
வறண்ட நிலத்தின்
உலர்ந்த சாம்பலில்
மீண்டும் மீண்டும்
தட்டிக்கொண்டிருக்கும்
விதைகளுக்கான
அறுவடை காலங்கள்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# கடலில் கலந்த கண்ணீர்

படகில் மிதந்து செல்லும்
பதைக்கும் பயணம்
இடர்கள் பலதந்தும் இன்பமற்று
இன்னல்களைத் தரும்

உடலை வருத்தி உழைக்கும்
வர்க்கம் உயிரோடு போராடும்
கடலை நம்பிய கசப்பான
வாழ்க்கையில் தொடரும் வலிகள்

மண்ணும் சோறும் மாறாத உணவு
மனக்குறை தினமும் வாட்டிடும் கனவு
வண்ண மகிழ்ச்சி வனப்பின்றிப்
வராது போகும்

வெயில் மழை பாராத திண்டாட்டம்
கரையிலிருந்து எட்டிய தூரம் வரை
காணாது தவிக்கும் தவிப்புகள் ஆயிரம்

துன்பம் துவளவைத்து துயரத்தை
அள்ளிக் கொடுக்கும்
தொலை தூரப்போனாலும்
திசை தெரியாத கலக்கம்

கடல் மாதாவை நம்பி கடக்கும்
கலையான தொழில்
மரணத்தின் மூச்சினில்
மாளும் அனர்த்த வாழ்வே
கடலில் கலக்கும் கண்ணீர்



கவிஞர் கிருஷ் அபி

தேனீக்கூட்டம் சேர்த்த
தேன் கொய்து போனால்
பார்த்திருக்கலாம்!


விண்ணிலிருந்து வீழும்
மழை வெண்ணிற
அருவியாய் மண் தொடும்
இடத்தில் நீராடிக் களித்தால்
மகிழ்ந்து இருக்கலாம்!

காந்தள் கிழங்கும்
தினையும்,வரகும்
கொண்டு போனால்
பசியாற்றுமே!

அகவன் மகளே
எனக்கொரு குறி சொல்லடி!
கள்வர் கொண்டு செல்லும்
செம்மரமும்,சந்தனமும்
இந்த மலைப்பிரதேசத்தை
ஒளியிழக்கச் செய்கிறதே!

மலையைப் பிளந்து
பாறையைக் களவாண்டு
போகின்றனரே!

கடம்பா,கார்த்திகேயா
கடல் கொண்ட நீரெல்லாம்
மேகமாய் சூல் கொண்டு
மோதி மோதி இடியாய்
இறங்கி உன் செவிப்பறை
கிழிந்துப் பட்டதா?
சேயோன் கை வேலாய்
மின்னல் உன் கண் பறித்ததா?



திணைப்புனம் காக்க வந்த
வள்ளியின் கிள்ளை மொழி
கேட்டு அவள் பின் சென்றனையோ?

களை இழக்கும் இந்தக்
குறிஞ்சியைக் காக்க
குமரன் என்ன செய்யப்
போகிறான்? என்று
கேட்டுச் சொல்லடி கிளியே!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை

# மயங்காத உள்ளம் வேண்டும்

நிலையில்லா வாழ்வில் அலைக்கழிக்கும் ஆசைகள்!
காலத்தின் சோதனையாய் காணும் வெற்றி,தோல்விகள்!
அதிகாரம், அதீத புகழுரைகள், மாயச்சொற்கள்
மதிமயக்கும் காரணிகள்! மதுவுக்கு அடிமையானால்
போதையினால் மதிமயக்கம்! அகங்காரம் கண்களை
மறைக்கின்ற போதெல்லாம் மதிமயக்கம்! அதனால்
உரைக்கின்ற வார்த்தைகளால் உருவாகும் பெருந்துன்பம்!
பொலிவில் தடுமாறும்! பொய்யுரையில் தடுமாறும்!
உள்ளத்தில் தெளிவிருந்தால் உலகமே அழகாகும்!
ஆசைக்காற்றில் அலையாமல், அறவழியை மறவாமல்
இசைக்கு மயங்கிடும் உள்ளமே சுகமாகும்!
அஞ்சாமை, அஞ்சுவது அஞ்சல், இகழ்வோரை
எஞ்ஞான்றும் பொருத்தருளல் இவையெலாம் கைகூட
பண்பு விளையும்! பணிவு உருவாகும்!
கையளவு செல்வமே கிடைத்தாலும் கலங்காமல்
கடலளவு கிடைத்தாலும் மயங்காமல் இருக்கின்ற
உள்ளமே மனிதனுக்கு மகுடமென்றார் கவியரசர்!
இயல்பாய் வெற்றி தோல்விகளை ஏற்கின்ற
மயங்காத மனம், மனிதர்க்கு வாய்த்திட்டால்
வியத்தகு ஏற்றங்கள் விளைந்திடுமே! ஐயமில்லை!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரீ



## அந்த முதலில் மட்டுமா?

முதல்
பள்ளி / கல்லூரி
நுண்கலை போட்டிகளில்
செய் பணிக்கான
போட்டித் தேர்வில்
நேர்முகத் தேர்வில்

படைப்பு பத்திரிகை
நிராகரிப்பில்
புறந்தள்ளப்பட்ட தெரிவில்
யோசனையில்

ஏற்பட்ட தோல்விகளும்
காலம் எல்லாம்
நீங்கா நினைவுகளாய்.
முதல் காதல் மட்டுமல்ல

******

## மௌனம் பேசியதே

ஒத்தக் கருத்துக்கு
வார்த்தைகள் இல்லா
ஆமோதிப்பு.

கருத்து மோதலில்
வாதத்திற்கு வலுசேர்க்கும்
யோசிப்புகாலம்.

பிடிக்காத பேச்சுக்கு
பதில் சொல்லா நிராகரிப்பு.
கடுஞ்சொற்கள் பரிசாக
கிடைக்கையில்
இப்படி ஆகிவிட்டதே என
மனதுக்குள் புலம்பல்.

வெற்றிக்கான பாராட்டில்
பதிலுரை இல்லா
மனதுக்குள் ஆரவாரம்

தன்னிலும் வலுஉள்ளவர்களின்
நிராகரிப்பில்
செய்வதறியா திகைப்பு.


கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

மகிழ்வோ துயரோ
விழிகளில் வழிந்திடும்
ஈரமது உணர்த்திடும் உண்மை



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

1. அம்மா கொஞ்சிய
முதலாம் வாய்மொழி
அதனால் ஆனது
தமிழாய்த் தாய் மொழி



2. அம்மாவின் நினைவு
நீறு பூத்த நெருப்பு
அணைக்கத் தோற்கும்
கண்ணீர்த் தொகுப்பு

3. இரவின் அமைதியில்
மரத்தடித் தாலாட்டு
துள்ளி எழும்பும்
அம்மாவின் நினைவு

4. கங்கையில் கரைத்த
அன்னையின் அஸ்தி
தினமும் நடக்கிறது
கரையில் ஆரத்தி

கவிஞர் ரவிஜி

நெய்லியின் போனை எடுத்து "சொல்லு நெய்லி. என்ன விசயம்?:" என்று கேட்டான் நரேன்.

" நான் மும்பை கிளம்புகிறேன்" என்றாள் எதிர் முனையில்

"என்ன செய்தி, ஏன் திடீர் பயணம்?" சுரத்தில்லாமல் கேட்டான் நரேன்.

"கோடிக்கணக்கில் பணம் தருபவர்களுக்கு பொறுமை கிடையாது நரேன்"

"ஏய்... உனக்குத்தான் எல்லா சம்பவங்களையும் அப்பப்ப என்ன நடக்குதுண்ணு எல்லாம் சொல்லிக்கிட்டிருக்கேன். எதையும் புரிஞ்சுக்காம பேசறியே?. இதிலே வேற நான் ஆஸ்பத்திரியிலே இருக்கேன். புரிஞ்சுக்கிட்டுத்தான் இந்தியா வர்றியா..யானை என்னைத்தூக்கி எறிஞ்சதை பார்த்திருந்தா இப்படி எல்லாம் பேச மாட்டாய்"

"ஏதோ நாலு கோடி வாங்கிட்டு இப்படி யு.கே. குளிரில் அல்லாடாமல் இந்தியாவிலே ஏதோ ஒரு ஓரமா போய் தங்கி சந்தோசமா வாழ்ந்துட்டு போயிடலாமுண்ணு நெனச்சேன். ஏனோ எனக்கு எதுவுமே கொடுத்து வைக்கவில்லை. அவ்வளவு தான்." பெருமூச்சு விட்டவள்," இப்பவும் நேரே திருவனந்த புரம் வந்து களக்காட்டுக்கு வர ரொம்ப நேரமாகாது. ஆனா ... அதுக்குள்ளேயாவது அந்த செடியை கண்டு பிடிச்சிடுவே என்கிற ஒரு அசட்டு நம்பிக்கை நெஞ்சுக்குள்ளே ஓடிகிட்டேயிருக்கு..."

சிரித்துக்கொண்டே கண்ணீரைத்துடைத்துக் கொண்டவள், " எங்கே உன்னை பார்த்தேன்? ஏன் உன்னைக்காதலிச்சேன் என்பதெல்லாம் இனி பிரச்சினையேயில்லை.

உன்னோடு மகிழ்ச்சியா வாழ்ணும்ணு முடிவு பண்ணியாச்சு... பார் நரேன் கண்ணா... நீ எப்படியாவது வசந்தை பாலோ பண்ணி இன்னைக்குள்ளே அந்த செடியைக் கொண்டு வரப்பாரு." என்றாள் நெய்லி.

"சே... வீணாக அழாதே... கண்ணைத்துடைத்துக் கொள். நீ இங்கே வந்து சேர்றதுக்குள்ளே ஏதாவது வழி பண்ணுகிறேன். ஆங்... எப்ப கிளம்புகிறீர்கள்?" என்றான் நரேன்.

"நாளைக்கு காலையில் மும்பை... அனேகமாக... நாளை மறு நாள் தூத்துக்குடி... அங்கேயிருந்து களக்காடு..."

"யாரெல்லாம் வருகிறீர்கள்?"

"அந்த மருந்துக் கம்பேனி சி.இ.ஓ., ஹைட்ரன், ரிச்சர்ட்.. அவனுடைய பி.ஏ. சிமி., நான்..."

கவிஞர் இரஜகை நிலவன்

"சரி… தொடர்பிலே இரு.. நான் பார்த்துக்கொள்கிறேன்." காலில் வலியோடு யோசிக்க ஆர்ம்பித்தான் நரேன்.

" அவர்களுக்கு நம்முடைய திட்டங்கள் ஏதேனும் தெரியுமா?"

"இல்லை… களக்காட்டு மலையில் ஏதோ ஒரு பகுதியில் அந்தச்செடியைக் கொண்டு வரப்போயிருக்கிறாய் என்பது தெரியும்"

" நெய்லி… அவங்க உன்னை விரட்ட ஆரம்பிச்சிட்டாங்களா?"

"ம்கூம். ஆனா… நாம் ஏன் இவ்வளவு சார்ட் பீரியட்குள்ளே தர்றோம்னு கமிட் பண்ணினோம் என்றே புரியவில்லை.."

"ஸோ … நெய்லி நீயும் என்னைச் சந்தேகப்பட ஆரம்பிச்சிட்டியா?"

"இல்லை நரேன். ஏதோ எடுத்து கடையிலே வச்சிருக்கிற மாதிரி நீயும் ஒரு வாரத்திலே பிடுங்கி வருவதாகச் சொல்லி விட்டு… இப்படி ஆஸ்பத்திரியிலே போய் படுத்துக்கிட்டா… என்ன பண்ணுறது… கொஞ்சம் யோசித்துப்பார். நீ ரிச்சர்ட் இடத்திலே இருந்தாலும் அதைத்தான் செய்திருப்பாய்.. என்ன… நம்முடைய கமிட்மெண்ட் கொஞ்சம் பிந்தி இருந்திருக்கலாம். பரவாயில்லை… சில சம்பவங்கள் நாம் நினைப்பது மாதிரி எல்லாம் நடப்பதில்லை."

"சாரி நெய்லி எதிர்பாராத நிகழ்வுகள் யானைத்தூக்கிப் போட்ட நிகழ்ச்சி தான் எனக்கு இன்னும் அதிர்ச்சியாக இருக்கிறது."

"பார். நரேன் இவர்களெல்லாம் நீ புரூடா விடுகிறாய் என்று நினக்கிறார்கள். யானையாவது… அது தூக்கிப் போட்டால் பிழைக்க முடியுமா? எனக் கிண்டல் பேசுகிறார்கள்."

"அப்படி என்றால் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"அப்படித்தான் தோன்றுகிறது.அவர்களிடம் சொல்லிவிட்டு இப்போது வேற யாரோ பெரிய தொகையை கொடுத்து உன்னிடமிருந்து வாங்க திட்டம் போட்டிருக்கிறார்களோ என்று பேசிக்கொள்கிறார்கள்"

"சே! எவ்வளவு மடத்தனம் பண்ணியிருக்கிறோம்…ஏதோ போனோம். செடியைப் பிடுங்கிக் கொடுத்தோம். பணத்தை வாங்கிட்டுப் போயிடலாம் என்று நினைத்தது தப்பாகி விட்டது"

"ஆமாம். நரேன்... உனக்கு எதிராக... ஏதோ ஒரு மந்திரிக்கும்பலும் இந்தச் செடிய விக்கதுக்கு ஏதோ ஒரு லோக்கல் மருந்துக் கம்பெனி கூட சேர்ந்து நீ புடுங்கிக் கொண்டு வர்ற செடிய மெதுவா லவட்டிக் கொண்டு போறதுக்கு திட்டம் போட்டுக்கிட்டு இருக்கிறதா இங்கே பேசிக்கிறாங்க... அதப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?"

"இங்கே ஏதோ நடக்கிறது? ஆனா யாரெல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தான் தெரியவில்லை.எல்லாத்தையும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கிளம்பி வா. ஆங்.. நீ அநேகமாக நேரா ஆஸ்பத்திக்கு தான் வர வேண்டியிருக்கும். ஓ.கே.."

"சரி.. நான் புறப்படும்போது உனக்கு தெரிவிக்கிறேன்" என்றாள் நெய்லி.

தொடரும்...

சந்தர்ப்பம்‘

டித்வா புயல் நம்மை சோதிகும் என்பதை யாருமே எதிர் பார்த்தே இருந்திருக்கமாட்டோம். தொடர் மழையினால் தண்ணீர் தேங்கி வெள்ளம் பரவி கடல் நீரும் கலந்து விட்டபோது. உடமைகளை நனையாத படி செய்துக்கொண்ட போது கட்டிலில் நிறைத்து விட்டதில். கட்டிலின் கால் தண்ணீருக்குள் மூழ்கி விட்டது. இனி என்ன செய்வதென யோசித்த போது,எங்கும் போவதைப்பற்றி எண்ணம் எழவே இல்லை,சில,பல படிப்பினைகள் இல்லாமல் இல்லை,



சமயலறைக்குள் நீண்ட நேரம் நின்றும் நடப்பதும் என்பதால் கால் வலி எடுக்கும் இது வாதப்பிரச்சனையில் சேரும் என்பதால் எனக்கென்று சப்பல்(பாதணி) உண்டு. வீட்டு படிக்கட்டை விட்டு சப்பல்(பாதணி) இன்றி வெறுகாலுடன் நடந்ததே கிடையாது. நீன்ட நேரம் ஈரத்தில் நின்றதுமில்லை. பார்த்து பார்த்து கவனிப்பதுண்டு.

ஆனால் 2025/11/28 வெள்ளிக்கிழமை என்னை அத்தனையாலும் சோதித்தது. 9:30 Am - 04pm வரை தண்ணிருக்குள் தான் நிற்க வேண்டிருந்தது. எதை எடுத்தாலும் தண்ணீரில் விழும் என்ற பயம் அப்பியது. நிலப்பரப்பென்றதையே தண்ணீர் சூடிருந்தது.

மச்சுனரினதும் ராத்தாவினது (தமக்கையும், மைத்துனரும்) குரல் "ஆளுக்கு ரெண்டு உடுப்பையாவது தயாரா வைங்க என்ன பண்ணலாம்னு பாப்போம் ".

"நீ கால்களை கதிரைல வை தண்ணீருல ரொம்ப நேரம் போடாதே!"

"பார்த்து கவனமா நடங்க வீழ்ந்துடாதிங்க".

கவிஞர் சீஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

ஒரு கட்டத்தில் சோர்வை கடந்து "இது அல்லாஹ்வின் சோதனை" இது தான் மரண நாளென்றால் அல்ஹம்து லில்லாஹ். என நம்மை நாமே தேற்றி தண்ணீருடன் தோழமை சூடி காலடித்து விளையாட துவங்கினோம்.

நேரம் கூட கூட தண்ணீர் கூடியது மழையும் தூரலை நிறுத்தவில்லை. காற்றும் பயங்கரமானது.

கடல் மட்டம் அதிகரிப்பில் கால்வாய் நீரும் வீதியை முட்டி நின்றது. பாதையோர முதல் வீடு நம் வீடு கடல் கொந்தளிப்பு பயங்கரமாக இருந்தது.இரவில் தண்ணீர் வேகம் அதிகமானால் என்ன செய்வது வாருங்கள் உங்கள் அனைவரையும் உம்மமா வீட்டில் விட்டு வருவதாக மச்சுனர் மற்றும் ராத்தாவின் பரிந்துரை. நீங்கள் இருவரும் வருவதானால் நாமும் வருகிறோம் என்ற பிடிவாதத்தில் ஒருநாளில்லா நாளாய் நாம் ஆளுக்கு ரெண்டு மாத்து உடையுடன் வீட்டை விட்டு வெளியேறினோம்.

காற்று வேகமானது மழைதுளி பயமுறுத்தியது. உயிர் இருந்தால் உறவு இருந்தால் போதுமென்பதாகவே இருந்தது..

மழை, காற்று, குளிர் ,உடல் நடுக்கம் கொண்டாலும் புதிதாக இன்னொரு இடத்தில் வசப்பட மனம் மறுத்தது.

எத்தனையோ முறை உம்மம்மாவின் வேண்டு கோள் வீட்டுக்கு வரும்படி பிள்ளைகள் படிப்பு பள்ளி நேரமென தடைபட்டே இருந்தது. அவை நேரமின்றி அருளானதோ? அவ்வன்று!

பசிமறந்து உணவை பற்றி நினைக்காத நாளாக அந்நாள் இருந்தது. சார்ஜ் இல்லாத போனும் கரண்ட் இல்லா சூழலும் கவரஜ் இல்லா போன்களும் தொலை தூரத்து தொடர்புகளை நிறுத்தி அருகாமை உறவுகளின் முக்கியத்துவம் உணர்த்தியது.

பாரம்பரியம் மறந்த ஒன்று கூடி சேர்ந்து விளையாடிய நாட்களாகி கலகலக்கும் நாளானது.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

குட்டி சாச்சுகள்(சின்னம்மா) கட்டி புரண்டு சிரிக்குமளவு நாள் மகிமை கொடுத்தது. மனதுக்குள் தூரத்துறவுகளின் சேதிக்காக பிரார்த்தனைகள் செய்தது.

கிளி, புறா, மைனா பத்து தாள்களில் எழுதி அவை பரிமாறி சேர்ப்பதில் குழுக்களாகினோம் பறவைகளை விடுத்து மாசா தபாக்கி மௌக்லியை அடையாளமாக்கி கலகலத்தோம்.

யாருக்கு என்னவோ என்று நினைத்து குமுறினோம்.சேதி அறிய துடித்த மனதோடு போராடி நின்றோம். உம்மமாவின் பின் வீட்டு கிணறும் நிறைந்தது முற்றம் நீரால் நிறைய தொடங்கி படிகட்டை மூடியது. இங்கும் நீர் உள்ளே வருமோ என நினைத்து அஞ்சியது மனம்.

யார் யாரும் பாதிக்காதிருக்க வேண்டி நின்றது. தண்ணீர் டெங்கியில் குறைவதாக சொல்ல சொல்ல நெஞ்சும் பயந்தது.
நேசரித்தோழியின் வீட்டு கிணற்று தண்ணீர் பாவனைக்கு உகந்தது. பால்யநேசபேச்சாய் நாளும் இணையத்தை விடுத்து பாசத்தோடு ஒன்றியது.

காலமும் மனதை ஐக்கியமாக்கிட குளிரும் காற்றும் சோதித்துவிட மரங்களெல்லாம் பாதையோடு வீழ்ந்து மின்சாரத்தை நிறுத்தியது. ஆடும் மரமும் வீழுமென்று பயந்து வெட்டி வீழ்த்தினார்கள். வீழ்ந்த மரத்தால் வந்த சேதாரம் நினைத்து வறுந்தி நின்றார்கள்.


குளிரில் நடுங்கிய காலும் பழக்கமில்லா புதிய படுக்கையும் சேதியறிய முடியாத காலநிலையும் கண்ணில் தூக்கத்தை நிறுத்தியது.
இப்போதெல்லாம் அந்நாளை நினைக்க பயமாகிறது. காலசூழல் தேசத்தையே உலுக்கி தான் விட்டது. வருத்தமும் வறுந்துதலும்இருந்தாலும் வலிகளை கடந்து மீளுதலும் கிடைக்காமலா போய்விடும்..

எதுவும் தீராதது இல்லை தீர்வின் நாளை எண்ணிய எல்லாம் உண்டு நாமும் நாளை விடியலுக்கென பிரார்த்தித்து கொள்வோம் ..

கவிஞர் சீஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

## எனது கண்ணோட்டத்தில்

அரசியல் கட்சிகள் தங்களின் கட்சி அடையாளத்திற்காக என்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகவும் கட்சிக்கொடியினை அமைத்துள்ளனர். அதற்காக அதிகம் அதிகமாக செலவும் செய்கின்றனர். ஆனால் தொண்டர்களிடமோ நாட்டு மக்களிடமோ மானத்தை மறைக்கக் கூட துணி இல்லாத நிலையில் இந்த அரசியல் காட்சிகள் எவருமே அம் மக்களை கண்டுகொள்வதில்லை.




இதைக் கவிஞர், கவிக்கோ அப்துல் ரகுமான்

கம்பங்களுக்கு ஆடை
மனிதர்களுக்கு நிர்வாணம்
விசித்திரமான தேசம்

என்பதாக கொடிக் கம்பங்களைப் பார்த்து எழுதியுள்ளார்

இது எல்லாக் காலத்திற்கும் எல்லா மக்களுக்கு அனைத்து நாடுகளுக்கும் பொறுத்தமான ஒன்றாகவே இந்த வரிகள் அமைகிறது.

அவர் இந்தியாவை மாத்திரம் குறிப்பிட்டு எழுதியிருந்தால் இந்நாட்டு மக்கள் என்பதை குறித்து எழுதியிருப்பார். இதனை இந்திய அரசியல் காட்சிக்கென மாத்திரம் குறிப்பிட்டு எழுதவில்லை. இதனை அவர் நன்கு உணரப்பட வேண்டுமென்பதற்க்காக ஹைக்கூ முறைமையாகவே எல்லா மக்களிடமும் சென்றடைய வேண்டும் என்ற அவரின் மிக ஆழமான கருவாக இதனை எழுதியிருக்கிறார்

.

இன்னும்

மலர் மரங்கள்
பிடுங்கப்பட்ட இடங்களில்
இப்போது இந்த மலட்டு மரங்கள்!

என எழுதியிருப்பதும் மரணித்த மனிதாபிமானத்தின் விம்பங்களை எடுத்துக் காட்டுகிறது.

கவிஞர் சுமையா சுத்தார், அனுராதபுரம் (இலங்கை)

## வாசிப்பனுபவம்

- ஆசிரியர்: க.ஜெய் விநாயக ராஜா, புதுச்சேரி.
- பக்கங்கள்: 110 விலை: ரூ. 150/-.
- வெளியீடு: படைப்பு பதிப்பகம், கடலூர்.

குறுகிய வடிவமும் பொருள் அடக்கமும் சேர்ந்து குன்றாய்த் தெரியும் கவிநயப் படைப்பே துளிப்பாவின் அங்கங்கள் ஆவன. சட்டென அகத்தில் ஈர்ப்பைப் பெறுவன துளிப்பாக்கள் என்றால் மிகையில்லை. அத்தகைய 30 துளிப்பாக்கள் தமிழில் முதலில் உயிர்த்து, 4 மொழிபெயர்ப்பாளர்களால் வெவ்வேறு உருக்களாக வந்துள்ளன. இதோ, புதுச்சேரியிலிருந்து, "நட்சத்திரங்களோடு ஒரு பகல் பொழுது" எனக் காட்சிகளோடு படைத்துள்ளார் நூலாசிரியர் க.ஜெய் விநாயக ராஜா அவர்கள்.




"வளர்வோம்! வளர்ப்போம்!" என்று, புத்தக ஆக்கத்தினை அழகுற வடிவமைத்துள்ளது படைப்பு பதிப்பகம். மேலும், விரிவானச் செய்தியை விரைந்துத் தந்து வாழ்க்கையின் நுணுக்கங்களைச் சிந்திக்க வைக்கும் இந்த நூலை ஐந்து மொழி ஆவணமென பதிப்புரையில், இலக்கியத் தடம் பதித்து வரும் இந்நூலாசிரியரைப் பாராட்டியுள்ளது.

இந்நூல் ஆசிரியர் இதற்கு முன் எழுதிய நூல்களைப் பற்றியும் பங்கேற்ற தொகுப்பு நூல்கள் பற்றிய விவரங்களையும் தன் அணிந்துரையில் முன்மொழிந்துள்ளார் பாவலர், எழுத்தாளர் புதுவை சீனு.தமிழ்மணி அவர்கள். தொடர்ந்து, புதுச்சேரியின் வரலாற்று ஆண்டுக் காலத்தைப் பற்றிய விவரங்களையும் அளித்துள்ளார்.

புதுச்சேரி, காரைக்கால் (தமிழகம் - தமிழ்), மாகே (கேரளம் - மலையாளம்), ஏனாம் (ஆந்திரா — தெலுங்கு) என நான்கு இடங்களில் உள்ள நிலப்பரப்புகள், ஒரு யூனியன் பிரதேசமாகி, புதுச்சேரியென அரசு நிர்வாகத்திற்காக இணைக்கப்பட்டப் பகுதியாகும் என்பது அனைவரும் அறிந்தது ஆகும்.

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி



அத்தகைய, இந்தப் புதுச்சேரி மண்ணை, பிரெஞ்சுகாரர்கள் 243 ஆண்டுகள் ஆண்டுள்ளனர். அத்துடன் ஆங்கிலேயர்களும் சிறிது காலம் ஆண்டுள்ளனர் என்ற விபரத்தையும் குறிப்பிட்டுள்ளார் புதுவை சீனு.தமிழ்மணி அவர்கள். தொடர்ந்து, தமிழில் முதன்முதலாக ஐந்து மொழிகளில் வெளிவரும் இந்நூலின் சுவையை எடுத்துக்காட்ட பலத்துளிப்பாக்களைக் குறிப்பிட்டு, அவற்றின் பொருட்சுவையை உணரும் வகையில், அவற்றைப் பற்றி எழுதி வாழ்த்தி உள்ளார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பா. ரவிக்குமார் அவர்கள், தன் "மௌனமாய் மலர்ந்த பிரபஞ்சம்" எனும் அவரின் அணிந்துரையில், தமிழில் எழுதியுள்ள இந்நூல் ஆசிரியரின் கவிதைகளை நான்கு மொழிகளில் மொழிபெயர்ப்பது என்பது சாதனை என்று குறிப்பிட்டுள்ளார். மொழிபெயர்ப்பு செய்கையில், கவிதையின் கவித்துவம் காணாமல் போவதற்குச் சாத்தியம் உண்டு என்பதையும் கூறியுள்ளார்.

பாவலர், எழுத்தாளர் புதுவை யுகபாரதி அவர்கள், சிந்தனை மிக்க துடிப்பாக்கம் படைத்துள்ள நல்லிளைஞரான நூல் ஆசிரியர், மேலும் நல்ல படைப்புகளைப் படைக்க வாழ்த்தி உள்ளார். குறிப்பாக, வாசகர்களுக்கான ஆவலுக்கு, புத்தர் எனும் அமைதியின் குறியீடாக உள்ள ஒரு துளிப்பாவினைப் பற்றியும் எடுத்துக்காட்டி உள்ளார். புதுச்சேரி அரசு, தலைமைச் செயலகத்தின் சட்ட மொழிபெயர்ப்பாளர், கவிதைக் காதலன், கலைமாமணி முனைவர் சுந்தர முருகன் அவர்கள் தன் வாழ்த்துரையில், சமூகப் படிநிலைகளைச் சமமாக்கிட, இந்நூலாசிரியர் இன்னும் கவிதைகளை எழுதவேண்டுமென ஊக்குவித்துத் தன் வாழ்த்துரையைத் தொடங்கியுள்ளார்.

அடுத்து, ஹைக்கூ எனும் துளிப்பாவின் தோன்றுதலையும் தொடரும் அதன் பாதைகளையும் விவரித்தவர், நூலாசிரியரின் படைப்பும் வாசகர்களை ஈர்க்கும் விதமாக அமைந்து உள்ளது என்பதற்கான, காரணங்களையும் சுட்டி வாழ்த்தியுள்ளார். மேலும், நூலாசிரியரின் எல்லாக் கவிதைகளும் உலகத்தைச் சலவை செய்யட்டும் என்ற எதிர்பார்ப்பையும் வாழ்த்துரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

ஜென் என்பது இயல்பாயிருந்து இலக்கின்றி வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை அப்படியே ஏற்றுக் கொள்வதாகும் என என்னுரையைத் தொடங்கி உள்ளார் நூலாசிரியர் க.ஜெய் விநாயக ராஜா அவர்கள். ஹைக்கூவின் அயலக இலக்கிய ஆளுமைகளில் தொடங்கி, நம் மண்ணின் மைந்தர்கள் வரையில், இந்தத் தளத்தில் தொடர்ந்து இயங்கிய, இயங்கிக் கொண்டிருக்கும் முன்னோடிகளையும் குறிப்பிட்டு நூலாக்கத்திற்குக் காரணமான அனைவருக்கும் நன்றி செலுத்தியுள்ளார் ஆசிரியர்.

மேலும், இந்த நூலின் தமிழ்ப்பாக்களை, மொழிபெயர்த்த ஆளுமைகளின் இலக்கிய அடையாளங்களை, தமிழிலும் அவரவர் மொழி பெயர்த்த மொழியிலும் என இரண்டு வகையாக நூலில் பதிந்துள்ளார்.

30 ஹைக்கூ - சென்ரியுக்கள் கொண்ட இந்நூல், அணிந்துரை, வாழ்த்துரை, புவியிடத்து வரலாற்று விபரங்கள், மொழிபெயர்ப்பாளர்களின் விவரங்கள், என்னுரை, முன்னுரை என வாசகர்களுக்கு ஒரு முழுமையான கட்டமைப்பு கொண்டதாக, வாசிப்பின் மூலம் தரும் வகையில் ஆக்கியுள்ளார் நூல் ஆசிரியர்.

"அவசர உலகில்
அரைநிமிடச் சிறைவாசம்
மின்ஏணி"

சாதாரணமாக நம் நகரப்பகுதி வாழ்வியலில் காணப்படும் வசதிதான் மின்னேணி என்றாலும் அதை உபயோகிக்கும்போது ஏற்படும் அனுபவத்தைத் துளிப்பாவின் மூலம் வெளிப்படுத்தும் நூலாசிரியரின் கோணம் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இந்தத் துளிப்பாவிற்கான ஓவியத்தில், முழங்காலில் தொடங்கி நீளும் பாதமாகவும் வரையபட்ட ஓவியத்தின், இடைப்பட்ட தூரமானது படிகளாகவும் வரையப்பட்டுள்ளது. பாதத்தில் உள்ள விரல்களில் இருந்து பாதைகள் விரிவதாகக் காட்டப்பட்டுள்ளது. கவிதைக்கேற்ப விரையும் வேகத்தில் ஓவியமும் விரைகிறது அல்லவா?

## வாசிப்பனுபவம்

அடுத்து, ஒரு வாழ்வியல் பற்றியதைப் பார்ப்போம்.

"கலைந்த ஒப்பனை
அணையாத ஒளிவிளக்கு
இரவுக் கலைஞன்"

"ஆடும் வரை ஆட்டம்" என்பதைப் போல அணையாத ஒளிவிளக்கான அந்த இரவுக் கலைஞனின் கலைக்குப் பின் வறுமை வாழ்க்கையில் ஆட்டம்போடுகிறது. அந்தக் கொடிய காட்சியைக் கண்ணில் காட்டுகிறது இந்தத் துளிப்பா.



இன்னொன்று, இறுதியாக, இனிதாக, ஒரு உதாரணம்,

"கைகளில்
ஒளிந்திருக்கும் கடவுள்
அன்பு கூடிய அறம்"

அறத்துப்பாலில் அன்புடைமையைக் கொண்டாடியவர் வள்ளுவர். போலவே, "அன்பே கடவுள்" என்பதை ஏற்றுக் கொள்ளாதோர் உலகில் யாருமிலர். அதைக் கூறும் துளிப்பாதான் இது என்பதிலும் மாற்றுக் கருத்து இராது. ஆனால், இதற்காகான ஓவியமாக, இரண்டு கைகள், அதில் விரல்கள், அந்த விரல்களில் ஒன்றான ஆள்காட்டி விரலின் நுனியில், பேனாவின் எழுது முனை, நகத்துடன் ஒட்டி இருப்பதாகக் காட்டிய கலைவடிவம் சிறப்பாக உள்ளது. எனவே, ஓவியருக்குச் சிறப்பு வாழ்த்துகள்! இது அறம் கூறும் அறுமொழி நூல்!

இந்நூலாசிரியர், க.ஜெய் விநாயக ராஜா மற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறோம். இன்னும் புதுமைகள் சேர்க்கும் இலக்கியப் பயணம், இனிதே நீளட்டும் என்று இந்நூலாசிரியருக்கு வாழ்த்துப் பூச்செண்டுகளை வார்த்தைகளால் வழங்கி வாழ்த்துவோம்.

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

கட்டுரை

### இளமைக் காலம் மற்றும் கல்வி



சிவகங்கை மாவட்டம் மகிபாலன்பட்டியில் 1881-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் தேதி பிறந்தார். இவரது தந்தை முத்துராமன் செட்டியார். இளமையிலேயே தந்தையை இழந்த கதிரேசன் செட்டியார், முறையான பள்ளி படிப்பை விட சுயமாகவும், அறிஞர்களிடம் பாடம் கேட்டுமே அறிவை வளர்த்துக் கொண்டார்.

### மொழிப்புலமை

இவர் தமிழ் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் இணையற்ற புலமை பெற்றிருந்தார். இதனாலேயே இவர் 'இருமொழிப் புலவர்' என்று அழைக்கப்பட்டார். வடமொழியில் உள்ள அரிய நூல்களைத் தமிழுக்குக் கொண்டு வருவதில் இவர் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

### முக்கியப் படைப்புகள் மற்றும் மொழிபெயர்ப்புகள்

பண்டிதமணியின் மிகப்பெரிய சாதனை கௌடில்யரின் 'அர்த்தசாஸ்திரம்' நூலைத் தமிழில் மொழிபெயர்த்ததாகும். இது தவிர பல முக்கியப் பணிகளைச் செய்துள்ளார்: மொழிபெயர்ப்புகள்: சுக்கிர நீதி, மாளவிகாக்னிமித்திரம், ரகுவம்சம் போன்ற வடமொழி நூல்களைத் தமிழாக்கம் செய்தார். உரை நடை: திருவாசகத்திற்கு இவர் எழுதிய 'திருவாசக மணி உரை' இவரது ஆழ்ந்த பக்திக்கும் இலக்கண அறிவுக்கும் சான்றாகும். ஆய்வு நூல்கள்: உதயணன் சரிதம், மண்ணியல் சிறுதேர் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

### கல்விப் பணி

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி, பல தமிழறிஞர்களை உருவாக்கினார். இவரது கற்பித்தல் முறை மாணவர்களிடையே மிகவும் பிரபலம்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

## விருதுகளும் சிறப்புகளும்

மதுரைத் தமிழ்ச் சங்கம் இவருக்கு 'பண்டிதமணி' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது. இவரது தமிழ் சேவையைப் பாராட்டி அரசு மற்றும் பல்வேறு இலக்கிய அமைப்புகள் இவரைப் போற்றியுள்ளன.

## நூல்கள்

### மொழிபெயர்ப்பு

- பிராதபருத்தரீயம்
- மாலதி மாதவம்
- சுக்கிர நீதி
- உதயணன் சரிதை
- சுலோசனை
- மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்)
- கௌடலீயம் பொருணூல் (கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்)
- மிருச்சகடிகம்
- இரசங்காதாரம்
- சைவ சமயம்
- உரை நடைக் கோவை (முதற்பகுதி) சமயக் கட்டுரைகள்
- உரை நடைக் கோவை (இரண்டாம் பகுது) இலக்கியக் கட்டுரைகள்
- திருவாசகம் விளக்கம்
- திருச்சதகம் விளக்கம்
- நீத்தல் விண்ணப்பம்
- திருவெம்பாவை விளக்கம்
- பதிற்றுப்பத்தந்தாதி

### சொற்பொழிவு

- பரிமேலழகரின் உரைநயம்
- குறுந்தொகை கடவுள் வாழ்த்து

### பிற

- நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு
- பண்டிதமணி பாடல்கள்
- பண்டிதமணி கடிதங்கள்
- கதிர்மணி விளக்கம் (திருவாசக விளக்கம்)

## இறுதிக்காலம்

அக்டோபர் 24, 1953-ல் பண்டிதமணி இரத்த அழுத்த நோயால் காலமானார்

நாளை

# நமதே

## அறிவை விட
## தைரியத்தினால்தான்
## பெரிய பெரிய காரியங்கள்
## சாதிக்கப்படுகின்றன

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com